தமிழ்ப் பல்கலைக்கழகச்

செய்தி மலர்

மலர்.8 திருவள்ளுவர் ஆண்டு 2020 – ஆடி 30 – 14-8-'89 இதழ்.5

கொடுமணல் அகழாய்வுப் பொருள் – கண்காட்சியும் கருத்தரங்கும்

கல்வெட்டியல்துறை, கொடுமணலில் 1989 மார்ச்–ஜூன் மாதங்களில் மேற்கொண்ட அகழாய்வில் கிடைத்த தொல் பொருள்களை அரண்மனை வளாகத்திலுள்ள அருங்காட்சியகத்தில் 1989 ஜூலை 27 முதல் 29 வரை தஞ்சை மக்களின் காட்சிக்கு வைத்தது. இக் கண்காட்சியைத் தொடர்ந்து கருத்தரங்கு ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

கருத்தரங்கையும் கண்காட்சியையும் 1989 ஜூலை 27 காலை 10.30 மணிக்கு, தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் தொடங்கி வைத்து உரை நிகழ்த்தினார். அவருடைய சிறப்புரையில் இவ்வகழ்வின் முடிவுகளை வைத்து, பழந்தமிழர் வாழ்க்கையை அப்படியே மறு உருவாக்கம் செய்துகாட்ட முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

பின்னர் நடந்த கருத்தரங்கில் கொடுமணல் அகழ்வின் முக்கியத்துவத்தைப்பற்றி விவாதிக்கப்பட்டது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் செர்மானியப் பேராசிரியர்

ஐக்கிய செர்மானியக் குடியரசைச் சார்ந்த டுயுசு பர்க் பல்கலைக்கழகத்தில் மொழி மற்றும் இலக்கியத் துறையில் பேராசிரியராகப் பணிபுரியும் முனைவர் உல்ரிக் அம்மான் 18, 19-7-'89 ஆகிய இரு நாள்களிலும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறையின் சார்பில் இரு சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றினார்.

1. ஐக்கிய செர்மானியக் குடியரசில் கிளைமொழியும் நிலைபெறு மொழியும் -- சமுதாயம் மற்றும் கல்வி நோக்கக் கருத்துக்கள்.
2. ஒரு நாட்டின் மொழி நிலையும் செயற்பாடும்.

பேராசிரியர் அம்மான் தம்முடைய முதல்விரிவுரையில் வடக்கு செர்மானியக் கிளைமொழி, மத்திய செர்மானியக் கிளைமொழி, தென் செர்மானியக் கிளைமொழி என்ற மூன்று கிளைமொழிகளைச் செர்மானியக் கிளைமொழிகளாகக் குறிப்பிட்டார். நிலைபெறு மொழியிலிருந்து கூடுதல் வேறுபட்ட கிளைமொழிகளைப் பேசும் மாணவர்கள் நிலைபெறு மொழியில் திறமைபெற ஏற்படும் சிரமங்களை அவர் விவரித்தார். அவர் தம் இரண்டாவது விரிவுரையில் ஒரு நாட்டினுடைய மொழியின் நிலையையும் அதன் செயற்பாட்டையும் பற்றி விரிவாகப் பேசினார். ஒரு மொழிவகை எவ்வாறு ஒரு நிலைபெறு மொழியின் நிலையை அடைகிறது என்பதைப் பற்றியும் விவரித்தார். பல அறிஞர்கள் இதில் பங்கேற்று, கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டது பெரிதும் பயனுள்ளதாக அமைந்தது.

பாராட்டு நிகழ்ச்சி



காஞ்சிபுரம், தமிழ்ப் பல்கலைக்கழகத் தத்துவமையத்தில் திருமுறை அறக்கட்டிலின் சார்பில் சிறப்பு நிலைப் பேராசிரியராக ஆய்வு செய்து வரும் மகாவித்துவான் சி.அருணைவடிவேல் முதலியார் அவர்களது தமிழ்ப் பணி, திருமுறை சாத்திரப்பணி ஆகியவற்றைப் பாராட்டும் வகையில் 5-7-'89 காலை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஐம்பெருவிழாவில், அவர்களுக்குப் பொற்பதக்கம் வழங்கிப் பொன்னாடை போர்த்தி, "தமிழ்ப் பேரவைச் செம்மல்" என்னும் பட்டத்தையளித்து, அப் பல்கலைக்கழகத்தார் சிறப்பித்தார்கள்.

தமிழக அரசின் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் பொற்பதக்கம் அணிவித்தும் பட்டம் அளித்தும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

தமிழக அரசின் கல்வியமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றுப் பொன்னாடை போர்த்தி வாழ்த்துரை வழங்கினார்கள்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் மா.இலட்சுமணன் அவர்கள் தகுதியுரை படித்தளித்தார்கள்.

மகாவித்துவான் சி. அருணை வடிவேல் முதலியார் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த 'புலிவாய்' என்னும் ஊரில் 1-8-1907இல் பிறந்தார். தொடக்கக் கல்வியோடு நன்னூல், கந்தபுராணம், சிவஞான சித்தியார் சுபக்கம் முதலானவற்றையும் தம் தந்தையார்பால் பயின்றார். பின்பு தாமாகவே படித்துச் சென்னைப்பல்கலைக்கழக 'வித்துவான்' தேர்வில் தேர்ச்சிபெற்றார். உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகச் சில காலம் பணிபுரிந்த இவர், தருமையாதீனத் தமிழ்க்கல்லூரியில் துணைப் பேராசிரியராக எட்டு ஆண்டுகள் பணிபுரிந்தார். பின்பு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் 'திருக்குறள் இருக்கை'யில் 1978 முதல் 1983 முடிய ஐந்து ஆண்டுக் காலம் அமர்ந்து திருக்குறள் ஆராய்ச்சி செய்தார். அதன்பின்னர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கிளையாகக் காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட்ட தத்துவ மையத்தில் சைவ சித்தாந்தத் துறையின் சிறப்பு ஆராய்ச்சியாளராக நான்கு ஆண்டுகள் பணிபுரிந்தார்.

இவர், சைவ சித்தாந்த சாத்திரநூல்களில் பெரும் புலமை பெற்றவர் என்பதற்கு இவரெழுதிய 'சித்தாந்தத் தெளிவியல்', 'சித்தாந்த வினாவிடை', 'முப்பொருள் இயல்பு' என்னும் நூல்களே சான்று. சைவத் திருமுறைகளுக்கும் உரைகண்ட பெருமை இவருக்குண்டு. 6 முதல் 9 முடிய உள்ள திருமுறைகளுக்கு இவரெழுதிய உரையும் விளக்கமும் தருமையாதீன வெளியீடுகளாகும். இவை பலராலும் போற்றப்பெறுவன. பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்திற்கு இவரெழுதிய உரையும் சிறப்புக்குரியது. திரிபு, சிலேடை அமைத்துக் கவி பாடும் வன்மையும் இவர்பால் உண்டு. திருவண்ணாமலை இறைவன்மீது இவர் பாடிய பிரபந்தங்கள் 59 ஆகும். அவற்றுள் 100 வெண்பாவால் ஆய 'திருவருணை மாலை'யும், 100 ஆசிரிய 'விருத்தப்பாவால் ஆய 'திருவருணை முருகன் பிள்ளைத் தமிழு'ம் சிறப்பாகக் குறிக்கத் தகுவன.

சவகர்லால் நேரு நூற்றாண்டு விழா

காஞ்சிபுரம் தமிழ்ப் பல்கலைக்கழகத் தத்துவமையமும் பாரத மாநில வங்கியின் காஞ்சிபுரம் கிளையும் இணைந்து சவகர்லால் நேரு பற்றிய கருத்தரங்கு ஒன்றை 3-8-'89 அன்று காஞ்சிபுரம் தமிழ்ப் பல்கலைக்கழகத் தத்துவ மையக் கட்டடத்தில் நடத்தின. இக் கருத்தரங்கில் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் தலைமையேற்று உரை நிகழ்த்தினார். பாரத மாநில வங்கியின் சென்னை-தலைமை அலுவலகத் தலைமைப் பொதுமேலாளர் திரு வி.சுப்பராவ் தொடக்கவுரை நிகழ்த்தினார். பாண்டிச்சேரி பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் கே.வெங்கடசுப்பிரமணியன் மையக் கருத்துரை வழங்கினார்.

முனைவர் கே.பி.கிருஉஷ்ணசெட்டி, முனைவர் பி.கே.சுந்தரம், முனைவர் சி.கே.இராமன், முனைவர் டி.எஸ்.தேவதாசு, முனைவர் டி.ஆஞ்சநேயலு, திரு ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் ஆகியோர் கட்டுரை வழங்கினர்.

16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அரிய செப்பேடு

இராசேந்திர சோழ மிழலை நாட்டுச் சோழபுரத்து வன்னியர் குலத்தின் தால நாட்டுக்கு அதிபதியாகிய குன்னத்தார் கட்டையப்ப நயினார் குமாரர் நாகைய மழவராயர் நயினார் என்பவர் தமது ஆதிக்கத்தின்கீழ் இருந்த நிலங்கள் பலவற்றைக் குருக்கள் ஐயர் மடத்திற்கு, கி.பி. 1511-ல் தானம் கொடுத்த செய்தி குறிக்கப்படுகிறது.

விசய நகர அரசர்களின் பெயர்களும் பல்வேறு நாட்டுப்பிரிவுகளின் பெயர்களும் இச்செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளன. நாகைய மழவராயர் மருமகளுக்குக் கொடுக்கப்பெற்ற மஞ்சக்காணி நிலம் பற்றிய செய்தி கிடைக்கிறது.

பொன்னளந்த கடந்தையார் மகன் பெரிய நாயகர் கடந்தையார் அரண்மனை ஊழியர்களில் ஆண்கள், பெண்டிர் மற்றும் பண்ணைச் சாம்பான்கள், வீரர்கள் என இருபது பேர்கள் மடத்துக்கு அடிமைகளாகக் கொடுக்கப்பட்ட செய்தியும் இடம் பெற்றுள்ளது.

திருவையாத்துச் சக்கரம் என்ற காசு பற்றிய செய்தி இச்செப்பேட்டின் வாயிலாகக் கிடைக்கின்றது. நாகைய மழவராய நயினார், கடந்தையார் ஆகிய இருவரின் உருவங்களும் வணங்கிய நிலையில் இச்செப்பேட்டில் வரையப்பட்டுள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழகக் கட்டடக்கலைத்துறை விரிவுரையாளர் டாக்டர் இரா.பவுன்துரை இச்செப்பேட்டைக் கண்டுபிடித்துள்ளார். கி.பி. 1511-ஆம் ஆண்டினைச் சேர்ந்த இச்செப்பேடு தஞ்சை மாவட்டம் திருப்பூந்துருத்தியில் கிடைத்தது.

தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரவை

தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரவைக்குக் கீழ்க்கண்ட ஐவர் பல்கலைக்கழக வேந்தவரர்களால் உறுப்பினர்களாக 20-6-'89 முதல் 3 ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

1. முனைவர் ச.வை.சன்முகம், எம்.ஏ.,எம்.லிட்.,பி.எச்.டி.,
   மொழியியல் துறைப் பேராசிரியர்
   அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
   சிதம்பரம்

   முனைவர் க.ப.அறவாணன், எம்.ஏ.,எம். லிட்., பி.எச்.டி.,
   பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
   பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகம்
   பாண்டிச்சேரி

3. முனைவர் பு.பா.இராசராசேசுவரி
   முன்னாள் முதல்வர் மற்றும் தமிழ்த்துறைப்பேராசிரியர்
   ராணிமேரிக் கல்லூரி, ஸ்ரீ ராகவேந்திரா"
   எம்.21/2, 27-ஆவது குறுக்குத் தெரு
   பெசன்ட் நகர், சென்னை - 600 009

4. பேரா. நயினார் முகம்மது
   முதல்வர்
   ஜமால் முகம்மது கல்லூரி
   திருச்சிராப்பள்ளி - 620 020

5. தந்தை வி.மி.ஞானப்பிரகாசம், எஸ்.ஜே.,
   தமிழ்த்துறை
   மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
   பல்கலை நகர்
   மதுரை - 4

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சப்பானிய ஆய்வாளர்



தாடவ் நக்கமுரா என்னும் சப்பான் நாட்டு ஆய்வாளர் தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறையில் ஆய்வாளராகச் சேர்ந்துள்ளார். இவர் இரண்டாண்டுகள் நாட்டுப்புறவியலில், குறிப்பாக ஐயனார் பற்றி ஆய்வு செய்வார். இவர் முதலில் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ள முடிவு செய்துள்ளார். இவர் இந்திய-சப்பானிய இணைப்புக் குழுவின் ஆதரவில் இவ்வாய்வை மேற்கொண்டு உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சப்பான் நாட்டில் கொக்கைடோ என்னுமிடத்தில் பிறந்த தாடவ் நக்கமுரா, டோக்கியோவிலுள்ள வாகோ பல்கலைக்கழகத்திலும், ரிசோ பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்றுள்ளார்.

தமிழ்ப் பல்கலைக்கழகச்

செய்தி மலர்

திங்களிதழ்

பதிவெண் TN/TJ/20

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 007.
தமிழ்நாடு - இந்தியா.

இ.அ.அ. மட்டும்.

37) திருவாக அதிகாரி
தஞ்சை மகாராசா சரபோசி
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

வீட்டு விளக்கம்
ாங்குதல் நல்ல
பழக்
பல்கலைக்கழகம்

तंजावूर - THANJ
भारत INDIA
रुपया 0.15 RUPEE

தமிழ்ப் பல்கலைக்கழகம்

களஞ்சியங்கள்

1. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-7
   ('கா' முதல் 'குட்டோ' வரை) உரு.300/-
2. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-8
   ('கேட்பப் பொறப்புகள்' முதல்
   'சிராசு-உத்-தௌலா' வரை) உரு.300/-
3. சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்
   தொகுதி-3
   ('ச' முதல் 'தோ' வரை) உரு.250/-
4. பெருஞ்சொல்லகராதி தொகுதி-1
   ('அ' முதல் 'அனைவோர்' வரை) உரு.200/-

கழிவு - 25%

பிற நூல்கள்

1. வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை
   - ஆர். இராமநாதன் உரு. 60/-
2. கேரளத் தமிழர்களும் அவர்களின்
   சிக்கல்களும்
   - உ. சுப்பிரமணியம் உரு. 25/-
3. தமிழ் நாடகம் தோற்றமும்
   வளர்ச்சியும்
   - பழனி. அரங்கசாமி உரு. 7/-
4. தமிழ் யாப்பியலின் தோற்றமும்
   வளர்ச்சியும்
   - சோ. ந. கந்தசாமி உரு.100/-
5. தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-
   இளம்பூரணர் உரை
   - அடிகளாசிரியர் உரு. 45/-

புதிய வெளியீடுகள்

6. திருக்குறள்—ஒரு உலக இலக்கியம்
   - தலைமை நீதிபதி ச. மோகன் உரு. 3/-
7. செந்தமிழ்க் காவலர் சிதம்பர-
   நாதனார் சிந்தனைத் திறம்
   - செ. வைத்தியலிங்கன் உரு. 6/-

கழிவு - 15%

உறுப்பினர் கட்டண விவரம்

செய்திமலர் / நியூஸ்புல்லட்டின்

ஓராண்டு	உரு. 5/-	$ 4
ஈராண்டு	உரு. 10/-	$ 8
மூவாண்டு	உரு. 12/-	$ 10

தமிழ்க்கலை / தமிழ் சிவிலைசேசன்

தனியிதழ்	உரு. 15/-	$ 3
2 இணைப்பிதழ்	உரு. 30/-	$ 6
ஓராண்டு	உரு. 60/-	$ 15
ஐந்தாண்டு	உரு.240/-	$ 60

களஞ்சிய வெளியீடுகள்

அறிவியற் களஞ்சியம்	தொகுதி-1	உரு.300/-
" "	தொகுதி-2	உரு.300/-
" "	தொகுதி-3	உரு.300/-
வாழ்வியற் களஞ்சியம்	தொகுதி-1	உரு.300/-
" "	தொகுதி-2	உரு.300/-
" "	தொகுதி-3	உரு.300/-
" "	தொகுதி-4	உரு.300/-
" "	தொகுதி-5	உரு.300/-
" "	தொகுதி-6	உரு.300/-
சங்க இலக்கியப் - பொருட்களஞ்சியம்	தொகுதி-1	உரு.250/-
" "	தொகுதி-2	உரு.250/-

கழிவு : 25% அஞ்சற் செலவு தனி

பதிப்பாசிரியர் : இயக்குநர், பதிப்புத்துறை.
அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக மறதோன்றி அச்சகம், தஞ்சாவூர் - 613 001.